பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
27 07 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. 2047-ஆம்ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் லட்சியம் ஒவ்வொரு இந்தியனுக்கும் உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. சிறப்பு முகாம்கள் மூலம் பெறப்படும் மனுக்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் உடனடி தீர்வு காண வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
3. விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத வகையில் வளர்ச்சித் திட்டங்களை மாநில அரசு நிறைவேற்றி வருவதாக தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.
4. கர்நாடக அணைகளிலிருந்து காவிரியில் அதிக அளவு உபரிநீர் திறந்துவிடப்படுவதால் ஒகனேக்கலுக்கு நீர்வரத்து ஒரு லட்சத்து 30 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.
5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

[]<<<>>>[]

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற லட்சியம் ஒவ்வொரு இந்தியனுக்கும் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நித்தி ஆயோக்கின் ஒன்பதாவது ஆட்சிமன்றக் கூட்டம் நித்தி ஆயோக்கின் தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்றது.

அப்போது உரையாற்றிய அவர், வளர்ச்சிக்கான இலக்கை எட்டுவதற்கு மாநிலங்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிவித்தார்.

நாடு தற்போது தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல்வேறு மாற்றங்களை சந்தித்து வருவதாகத் தெரிவித்த பிரதமர், புதிய வாய்ப்புகளை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கு முழுமூச்சுடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சர்வதேச முதலீடுகளை ஈர்க்கும் வகையில் நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டம், நாட்டை வளர்ச்சிப் பாதையில் பயணிக்க வைத்திருப்பதாகத் தெரிவித்த அவர், தற்போது வளர்ச்சிக்கான சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாகக் கூறினார்.

நாட்டில் இளைஞர்களின் சக்தியையும், அவர்களின் செயல் திறனையும் ஒட்டுமொத்த உலகமும் உற்று நோக்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்த பிரதமர், இளைஞர்களை திறன்மிக்கவர்களாக உருவாக்க வேண்டும் என்பதே அரசின் இலக்காக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

திறன் மேம்பாடு, ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள், தொழில் சார்ந்த நுண்ணறிவு ஆகியவை வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான கருவிகள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற நித்தி ஆயோக் ஆட்சிமன்றக் கூட்டத்தில் மாநிலங்களின் முதலமைச்சர்கள், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள், நித்தி ஆயோக் துணைத்தலைவர் திரு **Suman Bery** மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

2047-க்குள் வளர்ச்சியடைந்த பாரதம் என்பது இந்த ஆண்டு நித்தி ஆயோக் ஆட்சிமன்ற ஆண்டுக் கூட்டத்தின் கருப்பொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாநில அரசுகள் ஒன்றிணைந்து இந்த இலக்கை எட்டுவதற்கான வழிமுறைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற மாநில தலைமைச் செயலாளர்களின் தேசிய கருத்தரங்கில் அளிக்கப்பட்ட பரிந்துரைகள் குறிததும் நித்தி ஆயோக் ஆட்சிமன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

அகில இந்திய வானொலியில் பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

பிரதமரின் உரையை நாட்டில் உள்ள அனைத்து நிலையங்களும் ஒலிபரப்பு செய்யும்,

அகில இந்திய வானொலி, டி டி நியூஸ், பிரதமர் அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் யூ டியூப் சேனல்களிலும் இதனை கேட்கலாம்.

பிரதமர் உரையை தொடர்ந்து அதன் தமிழாக்கம் இடம்பெறும்.

இது இரவு எட்டரை மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்

**[]<<<>>>[]**

தமிழகத்தில் நடைபெறும் சிறப்பு முகாம்கள் மூலம்மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டுமென்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் செயல்பாடுகள் குறிதது இன்று காணொலி வாயிலாக ஐந்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடிய முதலமைச்சர், பயனாளிகளுக்கு உரிய பயன்கள் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டுமென்று வலியுறுத்தினார்.

மகளிர் உரிமைத்தொகை, பட்டா மாற்றம் போன்றவற்றிற்கு இந்த முகாம்கள் மூலம் அளிக்கப்பட்ட மனுக்களுக்கு விரைந்து தீர்வு காணப்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம் உடனடியாக செய்து தரப்பட்டதாக அவர் கூறினார்.

இந்த கலந்தாய்வில் பங்கேற்ற திருப்பூர், நாகப்பட்டினம், மதுரை, வேலூர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டங்களில் நடைபெற்ற முகாம்களில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், முதியோர் உதவித்தொகை, குடிநீர் வசதி, இலவச வீட்டுமனைப்பட்டா, ஜாதி சான்றிதழ். போன்ற கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டதாக தெரிவித்தனர்.

**[]<<<>>>[]**

விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாத வகையில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம் கொறடாச்சேரி அருகே சிப்காட் தொழிற்பேட்டை அமைப்பதற்கான இடத்தை நேரில் ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கு மாநில அரசு முழுவீச்சில் செயல்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.,

இதுவரை பத்து லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பரவலான வளர்ச்சியை தரும் நோக்கில் மாநில அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் மற்றும் மகளிருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித்தர ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

கர்நாடகாவின் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் இன்று நூறு அடியை தாண்டியது.

மேட்டூர் அணையின் 90 ஆண்டுகால வரலாற்றில் 71-வது முறையாக அணை 100 அடியை தாண்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) -33--- செகண்ட்*

இதனிடையே கர்நாடக அணைகளிலிருந்து அதிக அளவில் தண்ணீர் திறந்துவிடப்படுவதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றின் இரு கரைகளையும் தொட்டவாறு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இன்று மாலை நிலவரப்படி ஒகேனக்கலுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தொவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தண்டபாணி ) --- 34 செகண்ட்*

இதனிடையே மத்திய நீர்வளத்துறையின் தென்மண்டல ஆறுகள் பிரிவின் செயற்பொறியாளர் மேட்டூர் அணையின் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்.

காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் அமைந்துள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து ஒரு லட்சத்து 45 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுவதால் நாளை மாலைக்குள் அந்த தண்ணீர் மேட்டூரை வந்தடையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

மின் கட்டண உயர்வால் பொதுமக்கள் மட்டுமல்லாது சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவை மண்டலத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு குறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மாநில அரசு மின் கட்டண உயர்வை திரும்பப்பெற்றாலதான் இந்த நிறுவனங்கள் தொடர்ந்து இயங்குவதற்கான சூழ்நிலை உருவாகும் என்று அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் நிலுவையில் உள்ள தருமபுரி – காவிரி உபரிநீர் திட்டம், அத்திக்கடவு - அவிநாசி திட்டம், காவிரி – குண்டாறு திட்டம் போன்றவற்றை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியறுத்தினார்.

நித்தி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் பங்கேற்காததால் மாநிலத்தின் கோரிக்கைகளையும், கருத்துக்களையும் தெரிவிக்கும் வாய்ப்பு தவறவிடப்பட்டிருப்பதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குறை கூறினார்.

**[]<<<>>>[]**

தென்காசி மாவட்டம் சுந்தரபாண்டியபுரத்தில் மாநில சுகாதாரத்துறை சார்பில் வருமுன் காப்போம் திட்ட முகாம் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் 149-வது பிறந்த நாளையொட்டி கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம் கிராம நிர்வாக அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு ஆட்சியர் திருமதி அழகுமீனா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**[]<<<>>>[]**

திருத்தணி அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் ஆடிக்கிருத்திகை தெப்பத் திருவிழா இன்று தொடங்கியது.

ஆடிக்கிருத்திகையொட்டி திருவள்ளூர் மாவட்டத்திற்கு வரும் திங்கட்கிழமை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி அருகே கோமுகி அணை அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

மயிலாடுதுறையில் சுமார் 15 கோடி ரூபாய் செலவில் புதிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டிடத்திற்கு ஆட்சியர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் இன்று அடிக்கல் நாட்டினர்.

**[]<<<>>>[]**

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே உள்ள பில்லூர் அணையிலிருந்து இன்று இரண்டாவதுநாளாக வினாடிக்கு 14 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டம் உதகையில் கடும் குளிருடன் மழை பெய்து வருவதால் படகு இல்லத்தில் படகு சவாரி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கொழும்புவின் **Pallekele** —ல் நடைபெறும் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

இந்த தொடரில் மூன்று டுவென்டி — டுவென்டி போட்டி மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.

**[]<<<>>>[]**

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிசுடும் பிரிவில் இந்தியாவின் மனுபாக்கர் இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளார்.

இன்று நடைபெற்ற பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் அவர் மூன்றாவது இடத்தை பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

***<u>End of News</u>***